Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 47

வெள்ளிக்கிழமை
12 ஜனவரி 2024

மார்கழி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"ஏற்கனவே ஈடாடிக்கொண்டிருக்கிற வீடு இன்னும் உடையப்போகுது போல"

### தமிழரசுக் கட்சித் தலைமை

# இணக்கப்பாடில்லை தேர்தல்தான் முடிவு

## 21ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பு வேட்பாளர்கள் மூவரும் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 12**

**இலங்கை தமிழரசுக் கட்சிக்கு போட்டியின்றித் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. இதனால், எதிர்வரும் 21ஆம் திகதி தேர்தல் மூலமே கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவுசெய்யப்படவுள்ளார்.**

11



## பிரிட்டன் இளவரசி நேற்று வடக்கில்!

### வரவேற்றார் ஆளுநர்

யாழ்., ஜன. 12

பிரிட்டன் இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று உலங்கு வானூர்தியில் வருகை தந்தனர். தொடர்ந்து அவர்கள் வடக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றனர்.

இலங்கை மற்றும் பிரிட்டனுக்கு இடையிலான இராஜ

11

## புலிகள் மீதான தடை நீக்கப்படல் வேண்டும்!

### நாடாளுமன்றில் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 12

ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்பட்டதுபோல், விடுதலைப் புலிகள் மீதான தடையும் நீக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

11

## பலஸ்தீனத்தை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும்!

### ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

விரிவு:- பக்.11

### மண்டைதீவு

## பொலிஸ் காவலரண் மீது தாக்குதல்; சந்தேகநபர்கள் நால்வர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன. 12

மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், சந்தேகநபர்கள் நால்வர் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி மேனன் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் யுக்திய நடவடிக்கைக்கு பழிவாங்கும் செயலாகவே மண்டைதீவு பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் முன்னதாகத் தெரிவித்திருந்தனர். சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான

11

### வடக்கில் தொழிற்றுறைக்காக

## 1,000 ஏக்கரில் ஊக்குவிப்பு மையம்

யாழ்ப்பாணம், ஜன. 12

வடக்கு மாகாணத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மூன்று ஊக்குவிப்பு மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

11








மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுவேட்பாளர் முடிவு சரி என்பது நிரூபணம்

## சுரேஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழ் மக்களைத் தொடர்ந்தும் சிங்களத் தலைமைகள் ஏமாற்றி வருவதால்தான் நாம் பொதுவேட்பாளர் தெரிவை நோக்கித் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். ரணிலின் வடக்குப் பயணம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை மற்றும் அரசியல் பிரச்சினை தொடர்பில் ரணில் வடக்கில் எதையும் பேசவில்லை. மாறாக அபிவிருத்தி தொடர்பில் பேசிவிட்டுச் சென்றிருக்கின்றார். புலம்பெயர் முதலீடு தொடர்பில் பேசும் அவர். முதலீட்டாளர்கள் தமது முதலீட்டைப் பாதுகாப்பாக முதலிடுவதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதை மறந்துவிட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை. இப்படியான நகர்வுகளால்தான் தமிழர்கள் பொதுவேட்பாளரை நோக்கித் தள்ளப்பட்டிருக்கின்றார்கள் - என்றார். (ஒ-100-125)



# ஐஸ்போதையுடன் பொலிஸ் கைது!

யாழ்ப்பாணம், ஜன.12

பொலிஸ் அலுவலரொருவர் 50 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் திருகோணமலையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மன்னாரைச் சேர்ந்த பொலிஸ் அலுவலரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-20)

# அவயமிழந்த பெண்மீது வீடு புகுந்து தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜன. 12

வீடொன்றுக்குள் புகுந்து குடும்பப் பெண் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த பெண் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்துள்ளது. கணவன் வேலைக்குச் சென்ற நிலையில் தனித்திருந்த குறித்த பெண்மீதே இனந்தெரியாதோரால் இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பெண் இறுதிப் போரில் காலொன்றை இழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-19)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

நவகமுவ, துன்ஹந்தஹேன பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. (எ-இ)

# 10 பேர் மாயம்

நாட்டில் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களில் இரண்டு வயதுச் சிறுமி மற்றும் பாடசாலை மாணவி உட்பட பத்து பேர் காணாமற் போயுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

வடக்கு - கிழக்கு

# காணிப் பிரச்சினைக்கு இரு மாதங்களில் தீர்வு!

## பிரதமர் தினேஷ் கூறுகின்றார்

**கொழும்பு, ஜன.12**

**வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள மக்களின் காணிப் பிரச்சினைகள் மற்றும் காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் முன்னெடுக்கப்படும். அது தொடர்பில் ஜனாதிபதியின் வடக்குப் பயணத்தில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மக்களின் காணி விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி வருகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சில கிராமசேவையாளர் பிரிவுகளில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பல வருடங்கள் எடுத்தன.

வடக்கு, கிழக்கில் காணப்படும் காணிகளை அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குக் கட்டம் கட்டமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் தற்போது வசிக்கும் காணிகளுக்கு சட்டபூர்வமான பதிவுகள் இல்லாத காரணத்தால் அந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும்நடவடிக்கைகள் தொடர்பில் வரவு -செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் - என்றார். (எ-இ)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் எமது நாட்டிலேயே கொடூரம்

## சிறீதரன் எம்.பி. நீதியமைச்சருக்குப் பதிலடி

கொழும்பு, ஜன. 12

உலக நாடுகளில் பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள் உள்ளன. ஆனால் இங்குபோல் கொடூரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் மீது காதல் கொள்ளவில்லை. அது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது.

-இவ்வாறு நீதியமைச்சருக்குப் பதிலடி கொடுத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

1954ஆம் ஆண்டுகளில் காலி முகத்திடலில் ஜனநாயக வழியில் தந்தை செல்வா போராட்டம் நடத்தியபோது குண்டர்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியது யார்? குட்டிமணி, தங்கத்துரை உட்படச் சிறைகளில் எமது மக்கள் கொல்லப்பட்டனர். கண்களைத் தோண்டியெடுத்தீர்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்தானே இவற்றையெல்லாம் செய்தீர்கள். அநியாயங்களும், படுகொலைகளும் இந்த மண்ணில் நடந்தேறியுள்ளன.

அப்போது தமிழர்கள் ஆயுதங்களையா கையில் வைத்திருந்தார்கள்? பிரபாகரன் இருந்த காலத்தில் இந்த நாடாளுமன்றத்தில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உலக நாடுகளில் பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள் உள்ளன. ஆனால் இங்குபோல் கொடூரமாக இல்லை-என்றார். (எ-44)

# சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஜன.12

வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாந்தீவு வாவியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு, மாந்தீவு வாவிக்கு மீன்பிடித் தொழிலுக்குச் சென்றவரே இரண்டு தினங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (எ-இ)

# சிறந்த தமிழ்த் தலைவர்களை கொலைசெய்தவர் பிரபாகரனே

## கூறுகிறார் நீதியமைச்சர்

கொழும்பு, ஜன. 12

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால்தான் நாட்டில் படுகொலைகள் இடம்பெற்றன என்று கூற முற்படுவது தவறு. சிறந்த தமிழ்த் தலைவர்களைப் பிரபாகரன் கொலை செய்துள்ளார். உங்களைப் போன்றவர்கள் தான் தமிழ் மக்களுக்கு சாபக்கேடு.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரனை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்றில் விமர்சித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால்தான் இந்த நாட்டில் படுகொலைகள் இடம்பெற்றன என்று நீங்கள் (சிறீதரன்) கூறுகிறீர்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாத நாடொன்றைக் கூறுங்கள்? தமிழ்த் தலைவர்கள் பலர் கொலைசெய்யப்பட்டார்கள். அவர்கள் இந்தச் சட்டத்திலா கொலையுண்டார்கள். சிறந்த தமிழ்த் தலைவர்களை பிரபாகரன் கொலை செய்துள்ளார். தமிழ்த் தலைவர்களான துரையப்பா, அமிர்தலிங்கம் மற்றும் அவரின் கட்சிச் செயலாளராக இருந்த யோகேஸ்வரன் ஆகியோரைக் கொலை செய்தது யார்? இது சிங்கள அரசு அல்ல. இலங்கை அரசே - என்றார். (ச-44)

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விஷச்செடியாம்

## உதய கம்மன்பில தெரிவிப்பு

தண்டிக்கப்படவேண்டிய போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ள நிலையில் நாட்டு மக்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்திய இராணுவத்தினரைத் தண்டிக்கும் வகையில் சட்டமியற்றுவது எந்தளவுக்கு நியாயமானது? என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் பிவிதுரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

தண்டனை மற்றும் மன்னிப்பு என்பன இருதரப்புக்கும் வழங்கவேண்டும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு என்ற விஷச்செடியை வேரோடு அழிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குத் தொற்றுக்கு சிகிச்சை அவசியம்!

## மன்னார் மாவட்டச் செயலர் அறிவிப்பு

**மன்னார், ஜன.12**

**டெங்குத் தொற்றுக்குள்ளாவோர் வீடுகளிலிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்வதைத் தவிர்த்து மருத்துவமனைகளை நாடவேண்டும். அதன்மூலம் உயிராபத்துகளைத் தவிர்த்துக்கொள்ளமுடியும் என்று மன்னார் மாவட்டச் செயலர் கே. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோய் நிலைவரம் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது மன்னார் மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டில் உள்ளது.

எனினும் கடந்த டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதத்தை ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும்போது மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியாக மருத்துவப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-56-60)



ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தம்பாட்டி மற்றும் நாரந்தனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை டெங்குத் தடுப்பு களத்தரிசிப்பு இடம்பெற்றது. இதன்போது டெங்கு நோய்ப்பரவல் தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. (ச-66)

## மன்னாரில் இவ்வருடம் 54 பேருக்கு டெங்கு

மன்னார், ஜன.12

மன்னாரில் கடந்த 2023 ஆம் ஆண்டு 204 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 54 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் டெங்குத் தடுப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் கடந்த வருடத்தில் டிசெம்பர் மாதத்திலேயே டெங்கு பாதித்தோர் அதிகளவில் பதிவாகினர்.

இந்த வருடத்தில் இதுவரை 54 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குத் தடுப்பு நடவடிக்கையில் நாம் தீவிரமாகக் களமிறங்கியுள்ளோம். மக்களின் ஒத்துழைப்பும் எமக்கு அவசியம் - என்றார். (ச-60)

## கட்டைக்காட்டில் டெங்கு களத்தரிசிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கட்டைக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியான் கிராமஅலுவலர் தலைமையில் இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் இடங்களை வைத்திருந்தோருக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டதுடன் பருத்தித்துறை பிரதேச சபையுடன் இணைந்து பொது இடங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ச-27)

## டெங்கு பரவல்; ஐவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.12

டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழல் நிலவிய தனியார் மருத்துவமனையின் உரிமையாளர் உட்பட 5 பேருக்கு 21 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கடந்த 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பிரபல தனியார் மருத்துவமனை, தனியார் விடுதி, திருமண மண்டபம், உணவகம் உட்பட டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட 7 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்களில் இருவர் மன்றில் முன்னிலையாகாத நிலையில் விசாரணைக்கான திகதியிடப்பட்டது. அத்துடன் மன்றில் முன்னிலையானவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (ஒ-26)

# பேருந்துச் சேவைகளை சீராக நடத்தக் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜன.12**

பூநகரி, முக்கொம்பன் கிராமத்துக்கான பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக வீதிகளில் நீண்ட நேரம் பயணிகள் காத்திருக்க வேண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே பூநகரி அரசபுரம், நேரடம்பன் வழியாக முக்கொம்பன் வரை நடைபெற்ற பேருந்துச் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. 10ஆம் கட்டை வழியாக முக்கொம்பனுக்கு நடத்தப்படுகின்ற பேருந்துச் சேவைகளும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இதன் காரணமாக முக்கொம்பன் மக்கள் பூநகரி மருத்துவமனை பிரதேச செயலகம் என்பவற்றுக்குச் சென்று வருவதில் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். (ஒ-13)

## பதினம் தெரியுமோ?

**க**முதைக்குக் கற்பூர வாசனை தெரியாதமாதிரி சிலருக்கு கதிரையளின்ர பெறுமதியும் தெரியாது. உப்பிடி கதிரையளையும் அதின்ர தனித்துவமும் தெரியாததாலதான் கன இடங்களில அடிபாடு. படை பட்டாளம் இல்லாட்டி சிலருக்கு அணுவும் அசையாது. அதுவும் அமைச்சர்மார் எண்டா இன்னும் பந்தா காட்டுவினம். யாழ்ப்பாணத்தில இருக்கிற அந்த அமைச்சர், தனக்கு சப்போர்ட்டுக்காக ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்குத் தன்னோட ஒரு ஓசிச்சாப்பாட்டுக் கும்பலைக் கூட்டிக்கொண்டு திரியிறார் எண்டு பட்சி ஏற்கனவே சொல்லியிருந்தது. அந்தக் கும்பல் இப்ப ரணில் வந்து நிக்கேக்கையும் தங்கட விளையாட்டைக் காட்டினதால கனபேர் அதைச் சொல்லவும் முடியாமல், கூட்டத்தில இருக்கவும் முடியாமல் அந்தரப்பட்டவை.

பூநகரியின்ர அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்துக்கு ரணில் போனவர். அங்க வாறவைக்கெண்டு ஒழுங்குவரிசையில கதிரையள் போட்டிருந்தவை. குறிப்பிட்ட ஆக்களுக்குத்தான் அந்தக் கூட்டத்துக்கு அழைப்பெண்டதால, ஒரு லிஸ்ட் அனுப்புப்பட்டு அதில பேர் உள்ளவையைத்தான் மண்டபத்துக்குள்ள விட்டவை. அப்பிடியிருந்தும் அமைச்சரின்ர அல்லக்கையள், அந்த லிஸ்டுக்குள்ள தங்கட பேரை ஏதோ ஒருவகையில பதிஞ்சு உள்ளுக்க போட்டினம். போனவை காய்ஞ்ச மாடு கம்பில விழுந்தமாதிரி அடிச்சுப் பிடிச்சு கண்ணுக்குத் தென்பட்ட கதிரையளில குந்திட்டினம். அப்பிடி அவை இருந்த கதிரை ஒரு தமிழ் எம்.பி.க்கு ஒதுக்கப்பட்டிருந்த கதிரை. அந்தக் கூட்டத்துக்குக் கொஞ்சம் கழிச்சு வந்த அந்தக் கூட்டமைப்பு எம்.பி. தனக்கு எங்க கதிரை போட்டிருக்குதெண்டு பார்த்திருக்கிறார். ஆனால் அந்தக் கதிரையில அமைச்சரோட வந்த பட்டாளம் இருந்ததால, அந்த எம்.பி.க்கு கதிரை கண்ணில தென்படேலை. அதால அந்த எம்.பி. தனக்கு கிட்ட இருந்த ஒரு கதிரையில 'படக்கெண்டு' இருந்திட்டார்.

ஆனால், அந்தக்கதிரை ஜனாதிபதியோட வந்த ஆக்களுக்குப் போடப்பட்ட கதிரை. அதால கொஞ்சநேரத்தால அங்க வந்த ஜனாதிபதியின்ர பாதுகாப்புக்குப் பொறுப்பான ஆக்கள், அந்த எம்.பி.யை கதிரையில இருந்து எழுப்பிப் போட்டினம். எம்.பி.க்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. இருக்க இடமில்லாமல் அங்கையும் இஞ்சையுமா அவர் உலாத்திக்கொண்டு, தன்ர கதிரையைத் தேடிக்கொண்டு திரிஞ்சிருக்கிறார். பிறகு பாவம் பார்த்து ஆரோ ஒராள், எழும்பி இவருக்கு கதிரை குடுத்த பிறகுதான் தன்ர கதிர தேடும் படலத்தை அந்த எம்.பி. நிப்பாட்டினவர். ஊருலகத்துக்கு காணி, பூமியை அள்ளிக்குடுத்த 'தர்ம' வள்ளலின்ர மகனான அந்த எம்.பி.யையே இப்பிடி ஒரு கதிரைக்காக எல்லாருக்கு முன்னாலையும் அலைய வைச்சிட்டினம் அமைச்சரின்ர அடிப்பொடியள்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## மீனம்

கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பதை உணர்ந்த நீங்கள், அதிகம் தெரிந்திருந்தும் அலட்டிக் கொள்ள மாட்டீர்கள். மறப்போம் மன்னிப்போம் என்றிருக்கும் நீங்கள், சண்டைக்காரர்களைக் கூட சந்தோஷப்படுத்துவதில் வல்லவர்கள்.

உங்கள் 6வது ராசியில் ஆடம்பரமாக இந்தாண்டு பிறப்பதால் தயக்கம், தடுமாற்றம், பயம் எல்லாம் நீங்கும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். குருபகவான் 30.4.2024 வரை உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டில் இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆனால் செலவுகள் அடுத்தடுத்து இருக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உறவினர்களின் வருகையால் வீடு களைகட்டும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். பிள்ளைகள் குடும்பச் சூழ்நிலையை உணர்வார்கள்.

குருபகவான் 1.5.2024 முதல் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் அமர்வதால் சில காரியங்களைப் போராடி முடிக்க வேண்டி வரும். தைரியம் கூடும். எதிர்ப்புகள் அடங்கும். என்றாலும் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். புதிதாக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாத அளவுக்கு வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும்.

நீண்ட நாளாக இழுபறியாக இருந்த வழக்குகளில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும். தாய்வழி உறவினர்களுடன் இணக்கமாகச் செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்கள் விரும்பும் படிப்பில் சேர்ப்பதால் அவர்களின் தன்னம்பிக்கை வளரும். நண்பர்களுடன் சேர்ந்து புதிய தொழில் தொடங்க முயற்சி மேற்கொள்வீர்கள். எதைச் செய்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து முடிவெடுக்கவும்.

ராசிக்குள் ராகுவும், 7ல் கேதுவும் வருடம் முடியும் வரை அமர்கிறார்கள். எனவே மனக்குழப்பம், பேச்சில் தடுமாற்றம், எதையோ இழந்ததைப் போல் ஒரு வித கவலைகள், பதற்றம், தலைச்சுற்றல், பல் வலி வந்து நீங்கும். மனைவிக்கு கர்ப்பப்பை கோளாறு, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும். மனைவிவழி உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். அயல்நாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. மகன் அல்லது மகளுடன் வெளிநாடு சென்று வருவீர்கள். வேற்று இனத்தவர்கள் உதவுவார்கள். குலதெய்வம் கோயிலை புதுப்பிப்பீர்கள். யாருக்காகவும் பிணை கையெழுத்துப் போடவேண்டாம். வீடு கட்ட வங்கிகளில் பணம் வாங்கியிருந்தவர்கள் சில தவணைகளை குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த முடியாத அளவுக்கு தர்ம சங்கடத்தில் மூழ்கக்கூடும்.

இந்த ஆண்டு முழுக்க விரயச் சனி தொடர்வதால் வருங்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனதை வாட்டும். முக்கியமான பிரமுகர்கள், ஆன்மிகவாதிகள், சித்தர்களின் அறிமுகம் கிடைக்கும். எல்லோருக்கும் நல்லது செய்தும் கெட்ட பெயர்தான் மிஞ்சும். சிலர் உங்களைப் பற்றிய வதந்திகளைப் பரப்பிவிடுவார்கள். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**வியாபாரிகளே!** ஜனவரி மாதத்தில் திடீர் இலாபம் உண்டு. மே, ஜூன் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். டிசெம்பர் மாதம் முதல் கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**உத்தியோகஸ்தர்களே!** வேலைச்சுமை இருந்தாலும் அதிகாரிகளின் ஆதரவான பேச்சால் நிம்மதி அடைவீர்கள். ஜனவரி மாதத்தில் தகுதி உயரும். ஜூன் மாதத்தில் புது வாய்ப்புகளும், பதவிகளும் அமையும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**இந்த வருடம் பணபலத்தை உயர்த்துவதாகவும், பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் அமையும்.**

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனக்கசப்புகள் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். நண்பர்கள் வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்** மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அனுகூலம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும் நாள். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்:** திய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். யோகா தியானத்தில் மனம் லயிக்கும். புதிய பாதை தெரியும் நாள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். இலாபம் அடைவீர்கள். வாகனங்களை சரி செய்வீர்கள். ஒழைப்பால் உயரும் நாள். வழிபட தடைகள் விலகும். இழப்புகளை சரி செய்வீர்கள். நிம்மதி உண்டாகும். உற்சாகமான நாள்.

**துலாம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் இலாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம் :** மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

**தனுசு:** சோர்வு களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மகரம்:** எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களால் பிரச்சினைகள் வந்து செல்லும். அதிகம் உழைக்க வேண்டிய நாள். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கும்பம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்னுரிமை கிடைக்கும். மரியாதை கூடும் நாள்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றிபெறும்.

## பௌராணிகர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய அமரத்துவமடைந்த பரிபாலனசபை பொருளாளர் ச.க. முருகையா நினைவாக பௌராணிகர் கௌரவிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி ஶ்ரீ கணேசா சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது. (ச)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 12

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு சிறப்புப் பூசையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச-17)

## வேளாண்மை பயிலரங்கம்

கொடிகாமம், ஜன.12

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் காந்தி நிலையமும் இணைந்து நடத்தும் ஒரு நாள் சிறப்பு இயற்கை வேளாண்மைப் பயிலரங்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தில் இடம்பெறவுள்ளது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இயற்கை வேளாண்மை வல்லுநர் பாமயன் மற்றும் இயற்கை வேளாண் பண்ணை ஆலோசகர் ராஜகணேஷ் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்கவுள்ளனர்.

இதில் பங்கேற்க விரும்புவோர் நிலையச் செயலாளர் மா.பேரம்பலத்தின் 0776988691 அல்லது காந்தி நிலைய தலைவர் சி.சிவநேசனின் 0770332280 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி முற்பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

## பொலிஸ் காவலரண்மீது பெற்றோல் குண்டுவீச்சு!

### இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணம், மண்டைதீவு சந்தியிலுள்ள பொலிஸ் காவலரண் மீது பெற்றோல் குண்டு வீசிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 10 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படை, இராணுவம் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபட்ட காவலரண் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பெற்றோல் குண்டை வீசிவிட்டு இருவர் தப்பிச் சென்ற நிலையில் பொலிஸார் துரத்திச் சென்று அவர்களை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறையை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச- 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொழும்பை நோக்கி நான்கு விரல்கள்....


**கா**ஸாப் பகுதியில் நிலவும் மனிதாபிமான நெருக்கடிகள் உடனடியாக முடிவுக்கு வரவேண்டும் என்று பத்துக்கும் மேற்பட்ட மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து வலியுறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஒருநாட்டை நிறுவி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என்றும், இரண்டு நாடுகள் நிறுவப்பட்டு அந்த இரண்டு நாடுகளும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்படுவதன் ஊடாகவே இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலையால், காஸா முனையில் ஏற்பட்டுள்ள போர்நிலை தொடர்பிலும் அங்கு தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பிலும் தற்காலத்தில் உலகெங்கும் விவாதங்கள் தீவிரம்பெற ஆரம்பித்திருக்கின்றன. இது எப்போதோ ஆரம்பித்த காரியம்தான் என்றபோதிலும், உலகநாடுகள் - குறிப்பாக மேற்கத்தேய தேசங்கள் - தங்களின் 'இராஜதந்திரக்' கொள்கைகளில் தளர்வுகளை ஏற்படுத்தும் அளவுக்கு இந்த விவகாரம் தற்போது பற்றியெரியத் தொடங்கியிருக்கின்றது. "இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலை தவறு. கிழக்கு ஜெருசலேமை மையமாகக்கொண்ட பலஸ்தீனத்தை இஸ்ரேல் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். 'இரு நாடுகள்' என்ற கொள்கைதான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு'' என்பதை உலக நாடுகளின் தலைவர்கள் தற்காலத்தில் எந்தச் சமரசமும் இன்றி ஏற்றுக்கொண்டு வரும் பின்னணியில், அதே கருத்தை மேற்கத்தேய நாடுகளின் சிந்தனையின் பாற்பட்டு - தனது பங்குக்கு பிரதியெடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

காஸா மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பானது பின்புலமின்றிய விடயமல்ல. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நேட்டோ கூட்டணியிலுள்ள இராணுவ வல்லாதிக்கத்தைக் கொண்ட நாடுகளின் அனுசரணையில்தான் இஸ்ரேல் இந்தத் தீவிரமானதும் - கொடூரமானதும் - மிருகத்தனமானதுமான ஆக்கிரமிப்பை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், பலஸ்தீனத்தின் பக்கமுள்ள நியாயப்பாட்டை 'நாணயங்களால் நெய்யப்பட்ட வர்த்தகச் சுழற்சிக்கு அப்பாற்பட்டு' தெரிவித்தமைக்காக ரணிலை ஒருமுறை பாராட்டலாம். ஆனால், பலஸ்தீனத்துக்காக உருகும் ரணில், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன நடவடிக்கையை முன்னெடுத்தார் என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமானது என்ற சித்தாந்தமே 30 ஆண்டுகளாக இந்தத் தீவு குருதிச் சகதிக்குள் குளித்தெழும்பக் காரணமானது. இதிலிருந்து எந்தப் பாடத்தையும் இலங்கை இன்னமும் கற்றாகவில்லை. தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுதல், சிங்களப் பேரினவாதத் திணிப்பு, தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் முனைப்பு, மேய்ச்சல் தரவைகள் பறிக்கப்படுதல், தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத்தலங்கள் அழிக்கப்படுதல் என இஸ்ரேலிய மனோநிலைக்கு இம்மியும் குறைவில்லாத விடயங்களே தமிழர் தாயகத்தில் இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இலங்கைக்குள் இன்னமும் தீர்க்கப்படாத - தீர்க்கப்படவிரும்பாத பிரச்சினைகள் எத்தனையோ இருக்கும்போது, இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கு இடையிலான மத்தியஸ்தம் என்பது தேவையற்றதொன்று. இஸ்ரேலை அல்லது ஹமாஸை நோக்கி ரணில் ஒரு விரல் நீட்டும்போது இதர நான்கு விரல்களும் கொழும்பை நோக்கியவாறே இருக்கின்றன. இந்தப் புரிதலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொள்ளட்டும். தான் மேற்கத்தேய செல்லப்பிள்ளை என்பதற்காக, இலங்கையும் மேற்கத்தேய நாடுகளின் தகுதியுடன் - திராணியுடன் இருக்கின்றது என்று ஜனாதிபதி எண்ணிவிட்டார்போலும்.




# அரச ஊழியர்களுக்கு பணிநேரக் கட்டுப்பாடு

## வெளியானது சுற்றறிக்கை

**கொழும்பு, ஜன.12**

**அரச ஊழியர்களின் பணி நேரம் தொடர்பில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட சுற்றறிக்கை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப் பட்டுள்ளது.**

அதற்கமைய அரச அலுவலகங்களில் பணிபுரியும் அரச ஊழியர்கள் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அலுவலகங்களை விட்டு வெளியேறாமல் பணியைச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்கள் பிற்பகல் 3 மணி வரை பணப்பரிவர்த்தனையில் ஈடுபடவேண்டும்.

பணியின்போது தனது அலுவலக அடையாள அட்டையை அணிந்துகொள்வதுடன், சீருடை உதவித்தொகை பெறும் அனைத்து அரச அலுவலர்களும் சீருடை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கடமையின்போது தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்றோர் அலுவலகங்களுக்கு வருவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 'அஸ்வெசும' பயனாளர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவுகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை 2.4 மில்லியனாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த யோசனை எதிர்வரும் நாள்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். தற்போது 1.4 மில்லியன் குடும்பங்கள் இதன் மூலம் நன்மைகளைப் பெற்று வருகின்றனர். 'அஸ்வெசும' கொடுப்பனவின் புதிய பயனாளர்களுக்கான விண்ணப்பம் இந்த மாத இறுதியில் அல்லது பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கோரப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# தடை நீக்கம் தாமதம்

இலங்கைக் கிரிக்கெட்டுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம் எதிர்வரும் மார்ச் மாதம்வரை தாமதமாகும் என சர்வதேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பணிப்பாளர் மற்றும் இலங்கை கிரிக்கெட் சபையுடனான அடுத்த கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது என்றும், அந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

# உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன.12

வற் வரி காரணமாக கார்களின் விலை அதிகரிக்கவுள்ளது என்று இலங்கை மோட்டார் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன் கார்களின் உதிரிப்பாகங்களின் விலையும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அயலக தமிழர் மாநாடு

சென்னை, ஜன.12

தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில் 'தமிழ் வெல்லும்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாபெரும் அயலக தமிழர் விழா சென்னையில் நேற்று ஆரம்பமாகி, இன்றும் இடம்பெறுகின்றது.

நிகழ்வில் பங்கேற்பதற்காக இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், டுபாய், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டுள்ளனர். (எ-இ)

## நாளை

13.01.2024

**சனிக்கிழமை**

**மார்கழி 28**

சுபநேரம் : 03.33 - 05.03

ராகுகாலம் : 09.33 - 11.03

## நாளொரு நல்வார்த்தை

**ஒருபோதும் நீங்கள் உங்களிடம் குறைகாண முயற்சிக்க வேண்டாம்.**

**- ஜோயல் ஆஸ்டீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் துயர்துடைப்பாளராக மாணவர் சமூகம் எழுச்சியுறுக!

## பேராசிரியர் எஸ்.ரகுராம் அறிவுரை



**யாழ்ப்பாணம், ஜன.12**
**சமுதாயத்தை வழிநடத்துகின்ற பொறுப்பு ஒரு காலத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் சமூகத்திடம் காணப்பட்டது. இன்று இந்தப் பொறுப்பு கேள்விக்குறியாகியுள்ளது. மாணவர் சமூகம் தம்மை மதிப்பாய்வு செய்துகொள்வது தற்காலத் தேவையாகும் என்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் 'பயங்கரவாதி' நூல் வெளியீட்டு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று அரசியல்போக்கு பலவாறாக மாறி கட்சிகள் அனைத்தும் தேர்தல் அரசியலுக்குள் மூழ்கியுள்ளன. கட்சித் தலைமைக்குப் போட்டிகள் நிலவுகின்றன.

இந்த நிலையில் சரியான அரசியல் விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு மாணவர் சமூகத்திடமே உள்ளது.

அன்று இனக்கலவரம், இடப்பெயர்வு, இயற்கை இடர்கள் என அனைத்திலும் பல்கலைக்கழக மாணவர் சமூகம் முன்நிற்கும். ஆனால் இன்று மாணவர் சமூகம் தமது வளர்ச்சி, மகிழ்ச்சி என்பதற்குள் அடங்கிவிடுகிறது. எனவே மக்களின் குறைகளை எடுத்துக்கூற - துயர்துடைக்க மாணவர் சக்தி எழுச்சிகொள்ள வேண்டும். பல்கலை வளாகத்தைத் தாண்டிச் சிந்திக்கவேண்டும் - என்றார். (ச-125)



# 'பயங்கரவாதி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.12
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ஈழத்து எழுத்தாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமான தீபச்செல்வனின் 'பயங்கரவாதி' நூல் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.துவாரகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எஸ்.ரகுராம் பங்கேற்று நூலின் முதற்பிரதியை வெளியிட்டு வைத்தார். (ச-125, 20, 66)

# வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஜன.12
பலத்த காற்றால் சங்கானையிலுள்ள வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது. ஜே/163 கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடொன்றே சேதமடைந்துள்ளது. (எ-125)

# திடீர் பொலிஸ் சோதனை: பயணிகள் அசௌகரியம்

மன்னார், ஜன.12
மன்னார் மதவாச்சி பிரதான வீதி, குஞ்சுக்குளம்பிரதான சோதனைச் சாவடியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை போதைப்பொருள் தொடர்பான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மன்னாரிலிருந்து சென்ற வாகனங்கள், மற்றும் பறையநாளன்குளம் வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்த சகல வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. வாகனங்களில் பயணித்த மக்களுக்கு போதைப்பொருள் பரிசோதனை குறித்து அறிவித்தல்கள் வழங்கப்பட்டதன் பின்னர் சோதனை நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். இந்தத் திடீர் நடவடிக்கைகளால் வீதியூடாகப் பயணித்த மக்களும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். (ஒ-56)

# வடக்கு ஆளுநரைச் சந்தித்த இந்தியத் துணைத்தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன.12
வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஆகியோரிடையே நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று நடந்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் படகுச்சேவை, பலாலி விமான நிலைய அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அபிவிருத்தி உட்படப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-27)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு இணையத்தளம்

யாழ்ப்பாணம், ஜன.12
ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு, நெடுந்தீவு, வேலணை, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேசசபைகளுக்கும் பருத்தித்துறை நகரசபைக்கான இணையத்தளங்களே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-26)

# வீதியைப் புனரமையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

தென்மராட்சி, ஜன.12
சாவகச்சேரி, தனங்கிளப்பு வயல் கரை ஊடாகச் செல்லும் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் அதனைப் புனரமைக்குமாறு அந்தப் பகுதி நெற்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெற்பயிர்களுக்கு உரவகைகளை கொண்டுசெல்லமுடியாதளவுக்கு வீதி குண்டும் குழியுமாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மழைகாலத்தில் வெள்ளம் தேக்கமடைந்து நிற்பதால் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-9)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.12
குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுமென ஆச்சிரம நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-66)

# மீனவர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12
பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த மாதம் 10ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நீடித்துள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார். (எ-100)

# வெள்ள இடர் பாதிப்பு உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன.12
இடர்கால முகாமைத்துவ அமைச்சால் கடந்த நவம்பர் மாதத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களுக்கு முற்கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

கோயிற்குடியிருப்புப் பிரிவில் 6 குடும்பங்கள், வரணி வடக்குப் பிரிவில் 5 குடும்பங்கள், கைதடி வடக்கு , கைதடி தென்கிழக்கு, கொடிகாமம் வடக்கு, கல்வயல் மற்றும் சந்திரபுரம் ஆகிய பிரிவுகளில் தலா ஒரு குடும்பம் வீதம் இந்தக் கொடுப்பனவுக்குத் தெரிவுசெய்யப்பட்டன. (ச-9)

# நிரம்பியது தேராவில்குளம் நீரில் தத்தளிக்கும் மக்கள்

## நீரை வெளியேற்ற மாற்று ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜன. 12
அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக உடையார்கட்டு தெற்கிலுள்ள தேராவில் குளத்தின் நீர் நிரம்பி வழிந்து வருகிறது. இதனால் மக்களின் குடியிருப்புகள், வீதிகள் என அனைத்தும் நீரில் மூழ்கியுள்ளன. இந்த இடரால் 15 குடும்பங்கள் வரை இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, தேராவில் கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, குளத்து நீரை வெளியேற்றுவதற்கான தற்காலிக மாற்று ஏற்பாடாக புதுக்குடியிருப்பு - பரந்தன் தேராவில் வீதியின் குறுக்காகத் தற்காலிகமாக கொட்டு ஒன்றை வைத்து நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரிய கலாசாலையில் சரஸ்வதி கலையரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 12
கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கு சரஸ்வதி கலையரங்கு எனும் பெயர் சூட்டு விழா அண்மையில் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வியியற் கல்லூரி அமைவதற்கு தனது சொந்தக் காணியில் சுமார் 210 பரப்பை அன்பளிப்புச் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் பெற்றோரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கம் சரஸ்வதி தம்பதியின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மீனா தம்பதியர், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், கட்சியின் பிரமுகர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ச-100-125-159)

# வரிக்கோப்புப் பதிவு தண்டம் சட்டவிரோதம்

### ஊடகப் பேச்சாளர் சுரேன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 12
18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரிக் கோப்பு இலக்கம் பெற்றிருக்காவிட்டால்தண்டப்பணம்அறவிடமுடியாது எனரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

'இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காகப் பதிவு செய்யப்படவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம். ஆனால் பதிவு செய்யாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும் என்பது சட்டவிரோதம். இலங்கையில் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுபவர்கள் கட்டாயம் வரி செலுத்தவேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட எல்லோரும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களாகக் கருதமுடியாது.

அதுமட்டுமல்லாது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படும் என அறிவித்த அரசாங்கம் இவ்வளவு காலமும் வரி வருமானம் செலுத்தாதவர்களுக்கான தண்டம் குறித்து எதுவும் அறிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-27)



மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தாய்த்தமிழ்ப் பேரவையின் ஆதரவோடு நேசக்கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் அவை கையளிக்கப்பட்டன. சுமார் 140 குடும்பங்களுக்கான ரூபா 5 இலட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள், நுளம்புவலை, பாய் உள்ளிட்டவை இதன் போது வழங்கப்பட்டன. (ச-13)



## தெய்வீக கிராம விழா

கிளிநொச்சி, ஜன.12
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் தெய்வீகக் கிராம நிகழ்வு அண்மையில் திருமுறிகண்டியில் இடம்பெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், திருமுறிகண்டி இந்து வித்தியாலய அதிபர் பேரின்பநாதன் மற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள அலுவலர்கள், சமூக அமைப்பினர், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-75)





வருட இறுதிநாளை முன்னிட்டுத் 'தூய காரை நகர்' செயற்றிட்டத்துக்கு அமைய திண்மக்கழிவகற்றும் செயற்பாடு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. காரைநகர் பிரதேசசபையால் உக்காத கழிவுகள் பலவும் இதன் போது அகற்றப்பட்டன. (ம-66)



அச்சுவேலி மண்ணின் பெருங் கொடையாளர், சேர் சிற்றம்பலம் ஆபிரகாம் காடினரின் 125 ஆவது ஜனனதினம் அண்மையில் இடம்பெற்றது. அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் அவரது நினைவுத்தூபி அருகே இந்த நிகழ்வு இடம் பெற்றது. (ச-23)




## வர்ண இரவு நிகழ்வு

கிளிநொச்சி, ஜன.12
கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் சாதனையீட்டி வீர வீராங்கனைகளை கௌரவப்படுத்துவதற்கான வர்ணஇரவு நிகழ்வு கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா பங்கேற்றார்.

இதன்போது விளையாட்டுத்துறையில் கலந்து கொண்டு சாதனை படைத்த 232 பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
18 . 10 . 1940



உதிர்வு
10 . 01 . 2024

## திருமதி நல்லையா கமலாதேவி (கமலாக்கா)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மற்றும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா கமலாதேவி கடந்த (10.01.2024) புதன்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற வேலாயுதம் நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், கணேசபிள்ளை, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் சனியும், ஞாயிறும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

131, புதுச் செட்டித்தெரு,
கொழும்பு- 13

தகவல்: கீதா - மகள் - 077 940 6162
சதாருபன் - மருமகன் - 077 761 7571
பிரபு - பேறாமகன் - 077 741 0696

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 10, அராலி வீதி 72 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.
குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு உதுமால் லெப்பபை மொகமது மொகதீன் அவர்கள் 15.07.1969ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு தா.சங்கரப்பிள்ளை முகதாவில் 9226ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் றகீமாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் தொடர்பாக 06.07.1980ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் 1259ம் இலக்க உறுதி தொலைந்து விட்டதாக கடிதம் வழங்கியுள்ளனர்.
குறித்த ஆதனம் மொஹமட் சுல்தான் அப்துல் காதர் பெண் ஹிருநிஷா 18.02.1981ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் 1414ம் இலக்க அறுதி உறுதி மூலம் சுல்தான் அப்துல் காதர் ஹலித்திற்கு வழங்கியுள்ளார்
குறித்த ஆதனம் மொஹமட் சுல்தான் அப்துல் காதர் பெண் ஹிருநிஷா 18.02.1981ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் 1413ம் இலக்க அறுதி உறுதி மூலம் அப்துல் காதர் ரசாத்திற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் அப்துல் காதர் ரசாத் 23.09.1984ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் 2299ம் இலக்க அறுதி உறுதி சுல்தான் அப்துல் காதர் பாரூக்கிற்கு வழங்கியுள்ளார்.
குறித்த ஆதனம் சுல்தான் அப்துல் காதர் பாரூக் காதர் பாரூக் 20.08.2005ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 1007ம் இலக்க அறுதி உறுதி மூலம் சின்னத்தம்பி இராசதுரை மகள் சுகந்தியிற்கு வழங்கியுள்ளார்.
குறித்த ஆதனம் சின்னத்தம்பி இராசதுரை மகள் சுகந்தி 19.03.2010ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு A.இராஜரட்ணம் முகதாவில் 6015ம் இலக்க அறுதி உடன்படிக்கை உறுதி மூலம் அசன்அலி அக்பர் உதியாகத் அலியிற்கு வழங்கியுள்ளார். மேலும் சின்னத்தம்பி இராசதுரை மகள் சுகந்தி 10.07.2010 திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு A.இராஜரட்ணம் முகதாவில் 6432ம் இலக்க அறுதி உறுதி மூலம் அசன்அலி அக்பர் உஷியாகத் அலியிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் அசன் அலி அக்பர் உதியாகத் அலி பெண் சம்சுனா 16.08.2010ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு S.சிவபாதம் முகதாவில் 4422ம் இலக்க அறுதி உறுதி மூலம் நடராஜா ஸ்ரீகரன் அறுதி உறுதியாக வழங்கியுள்ளார்.
குறித்த ஆதனம் நடராஜா ஸ்ரீகரன் 19.09.2012ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு S.சிவபாதம் முகதாவில் 5944ம் இலக்க அறுதி உறுதி மூலம் அசன் அலி அக்பர் உதியாகத் அலி பெண் சம்சுனாவிற்கு வழங்கியுள்ளார்.
குறித்த ஆதனம் அசன் அலி அக்பர் உஷியாகத் அலி பெண் சம்சுனா 05.01.2017ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் 11812ம் இலக்க அறுதி உறுதி மூலம் நடராஜா ராஜசிறி பெண் மேரிகியூரிக்கு வழங்கியுள்ளார்.
குறித்த ஆதனம் நடராஜா ராஜசிறி பெண் மேரிகியூரி 13.05.2017ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 7271ம் இலக்க அறுதி உறுதி மூலம் அசன் அலி அக்பர் சியாரத் அலியும் பெண் சம்சுனாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் அசன் அலி அக்பர் சியாரதி அலியும் பெண் சம்சுனா 19.06.2017ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கிரன் முகதாவில் 7452ம் இலக்க அறுதி உறுதி மூலம் நடராஜா ராஜசிறியும் பெண் மேரிகியூரிக்கு வழங்கியுள்ளார்.
குறித்த ஆதனம் நடராஜா ராஜசிறியும் பெண் மேரிகியூரி 21.11.2019ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 11567ம் இலக்க அறுதி உறுதி மூலம் அசன் அலி அக்பர் சியாரத் அலியும் பெண் சம்சுனாவுக்கு வழங்கியுள்ளளார்.
குறித்த ஆதனம் அசன் அலி அக்பர் சியாரத் அலி மற்றும் பெண் சம்சுனா பேகம் சியரத் அலி 5215ம் இலக்க அறுதி உறுதி மூலம் மொகமட் பர்சான் பாத்திமா பஸ்னாவிற்கு வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை இது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட J/87 கிராமசேவகர் பிரிவில் உள்ள "இராசாளிக்குளம் கரை" நெற்பரப்பு இரண்டு குளி ஆறு தசம் இரண்டு ஐந்து (நெற் பர 2குளி 6.25) கடையும் அதற்குச் சேர்ந்தவைகளும் இந்த நெற்பரப்பு 2குளி 6.25 க்கும் எல்லைகள்.

கிழக்கு - அப்துல் சலாம் முகமட் ரஸாக்கினதும் சகோதரர்களினதும் ஆதனம்
வடக்கு - சாகுல் ஹமீட் அமீர் ஹம்சாவுக்கும் பெண் அஸ்மதீன் நிஸாவுக்கும் உரிய ஆதனங்கள்
மேற்கு - எட்டு அடி அகலமான பொதுப்பாதை
தெற்கு - றோட்டு

இதடங்கலும் இன்னும் எட்டு அடி அகலமான பொதுப்பாதையில் இதற்குரிய பாவிப்புரித்தும் தற்போது இவ்வாதனத்தை மொகமட் பர்சான் பாத்திமா பஸ்னா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் பர்சான் பாத்திமா பஸ்னா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயா மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர்,
யாழ் மாநகரசபை.

(CM115074N-1)

# மரண அறிவித்தல்

மலர்வு
30 . 05 . 1950



உதிர்வு
09 . 01 . 2024

## திருமதி
## தனலட்சுமி பாலசிங்கம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் யாழ். மாட்டீன் வீதி, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலட்சுமி பாலசிங்கம் அவர்கள் கடந்த (09.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் யோகம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து செல்லம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வசீகரன் (இத்தாலி), ரிசாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், லலிதா (ரதி) (இத்தாலி), செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிபிஷன், சோஃபியா, அஷ்மன் (இத்தாலி), சங்கீர்தனா ஆகியோரின் அன்பு பேத்தியும், கமலாதேவி, பராசக்தி, நகுலாம்பிகை, சந்திரபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.01.2024) சனிக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 711 0858 (மகள்)

## கோண்டாவிலில் குருதிக்கொடை


*யாழ். ஜன. 12*

*துர்க்கா விளையாட்டுக் கழக ஸ்தாபகர் அமரர் தம்பித்துரை சிவராஜாவின் நினைவாக கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் குருதிக் கொடை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை கோண்டாவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.*

*(ம-66)*

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 01 . 1944



மறைவு
09 . 01 . 2024

## அகஸ்ரின் பெனடிக்ற் (றாதா ஐயா)
### (முன்னாள் பாடுமீன் விளையாட்டுக்கழக தலைவர்)

குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்ரின் பெனடிக்ற் (றாதா) கடந்த (09.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் - ஆனாசி தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னமலரின் அன்புக் கணவரும், சசி, கலா, காலஞ்சென்ற றமேஷ் மற்றும் றஞ்சன் (பிரான்ஸ்), மீரா (லண்டன்), ஜினி (லண்டன்), சாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரனிஸ், குணம், றாஜீ, செல்வா, றொபின், குயின்ரஸ் ஆகியோரின் மாமனாரும், பிறேமா (லண்டன்), யூயின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பிறேமன், குட்டி (ஜேர்மன்), ஜீன், ஜீவா (சுவிஸ்), ஜீவிதா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.01.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.67, மவுண் கார் மல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 608 5726, 076 197 0660

(cs 53484) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

எதிர்கால நற்சிந்தனைகளை அறுவடை செய்யும் முயற்சியில் நீங்களும் பங்குகொள்ளுங்கள்

சம்பத் வங்கியினால் மீள் உயிரூட்டப்பட்ட "20" ஆவது குளமான வவுனியா கிடாச்சூரிக் குளமானது, மிக விரைவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இரு தசாப்தங்களாக தேசத்தின் குளங்களின் புனர்நிர்மாணப் பணிகளை பொறுப்புடன் ஆற்றிவருகின்றோம்.

அபேமசம்பத்
செழுமைமிகு தேசம்

www.sampath.lk

வடக்கில் மிகப்பெரிய வர்த்தக கண்காட்சி
THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

JITF 2024
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்

ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH CCIY

PLATINUM SPONSOR
DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS
ADRIAN SOLAR GREEN
NIPPON CEMENT

SILVER SPONSORS
Anchor, SOORYA, Hayleys Solar, Darley Butler, Elephant House, KELLS KREST, PHOENIX, Sera

OFFICIAL SPONSORS
PRINT MEDIA · TELEVISION · RADIO · DIGITAL MEDIA காலைக்கதிர் · CITY HOTEL

www.jitf.lk jitf.lk

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com

## வாசிப்பு மாத பரிசளிப்பு விழா



புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குட்பட்ட ஒலுமடு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய நூலகங்களால் நடத்தப்பட்ட வாசிப்பு மாத போட்டிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேசசபை பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

முதன்மை அதிதியாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.யசிந்தன், ஒலுமடு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய நூலகங்களின் நூலகர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த திருக்காட்சி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய பங்கு முதல்வர் ஆர். நேசராஜா தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. (ச-20)



அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டை முன்னிட்டு மாபெரும் மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றன. (ச-36)



இணுவில் 'ஏ.ரி.சி.' கரங்கள் அமைப்பால் தைப்பொங்கலை முன்னிட்டு கிராமத்தில் பொருளாதாரம் நலிவுற்ற 100 பேருக்கு பொங்கல் பொதியும் பொங்கல் பானையும் கையளிக்கப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் வணிக பீடாதிபதி க.தேவராஜா பங்கேற்றார். (ச-20)





கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் கற்பித்தல் சாராப் பணியாளராகச் சிறப்புறச் சேவையாற்றிய சீவரத்தினம் தங்கவேலின் பணி ஓய்வை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை மணிவிழா நடத்தப்பட்டது. கலாசாலையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் வதனி கேதாரநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-66)

## கடை வாடகைக்கு

கல்வியங்காடு மூன்றாம் கட்டையிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும்.

**077 175 0746**


## பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை

யாழ். பல்கலைக்கழகம் அருகில் அமைந்திருக்கும் அலுவலகத்தில் கடமையாற்ற பெண் உதவியாளர் தேவை. முன் அனுபவம் தேவையில்லை பயிற்சி வழங்கப்படும்.
சுய விபரக்கோவையை **076 220 6863** என்ற **Whatsapp** இலக்கத்திற்கு அனுப்பவும்.
**மாதாந்த சம்பளம்: 40000/- வழங்கப்படும்.**

(CS 27616) A-1

## மரண அறிவித்தல்

மலர்வு
12 . 11 . 1945



உதிர்வு
11 . 01 . 2024

### செகநாயகம்பிள்ளை ஜெகசோதி

**(பழைய செம்பருத்தி தேநீர் கடை முதலாளி)**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செகநாயகம்பிள்ளை ஜெகசோதி (சோதி) அவர்கள் நேற்று (11.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செகநாயகம்பிள்ளை அன்னபாக்கியம் அவர்களின் பாசமிகு புதல்வரும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), உமா (ஜேர்மனி), கெங்கா (பருத்தித்துறை), மணிமேகலா (பெல்ஜியம்), ரத்னா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகேஸ்வரி, அரவிந்த், காலஞ்சென்ற கண்ணன், ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும், கௌதம், மீரா, வினித், சந்தோஷ், ஹரீஸ், சத்யன், ஜதுசன், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2024) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப 01.00 மணியளவில் சுப்பர்மட இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு**
**076 287 3941**
**021 226 4407**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 27637) S-1

## மரண அறிவித்தல்



### கந்தையா அருணாசலம்

**(இளைப்பாறிய ப.நோ.கூ.ச. முகாமையாளர்)**

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானை ஆசிரியர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அருணாசலம் அவர்கள் 10.01.2024 புதன்கிழமை சாவகச்சேரியில் பூவுலகவாழ்வை நிறுத்திக்கொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், அனுஷியா, பத்மாஜினி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நடேசபிள்ளை காலஞ்சென்ற சீதாராணி, இன்பநாதன், கனகரட்ணம், கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், கிருபாகரன், சிவரதன், வனிதாஸ்ரீ, ஜெயசக்தி, ஜெயகணேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயா, அட்சயன், விதுர்ஷா, அட்சயா, சதானா, நயானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.01.2024) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிரதீபன் மகன் 076 638 0727**
**பத்மாஜினி மகள் 077 900 6947**
**சிவரதன் மருமகன் 077 248 9176**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 41526) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பயிற்சி

யாழ். ஜன. 12

யாழ். மாவட்டத்தில் முழு நேரமாக ஓட்டோ ஓட்டுநராகப் பணிபுரிவோர், பகுதிநேர பணிகளில் ஈடுபடுவதற்கு ஏதுவாக இலவச தொழிற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் இந்தப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன்படி, 40 மணித்தியால வர்ணப்பூச்சுப் பயிற்சி, 40 மணித்தியால குழாய் பொருத்துநர் பயிற்சி, 60 மணித்தியால மின்னியியலாளர் பயிற்சி, 30 மணித்தியால மரவேலை பயிற்சி, 30 மணித்தியால சிகையலங்காரப் பயிற்சி நெறி என்பனவே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ள ஓட்டோ சாரதிகள் தமது பிரதேச செயலகங்கள், விதாத வள உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதற்காக முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் பிரதீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. (ம-125)



மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணிகள் தற்போது துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இறங்குதுறையை ஆழமாக்கும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-66)

## ஜெனிற்றாவின் கைது கமரூனுக்குக் கடிதம்!

வவுனியா, ஜன. 12

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் வவுனியா மாவட்ட தலைவி சிவானந்தன் ஜெனிற்றா கைதுசெய்யப்பட்டமை தொடர்பில், பிரிட்டனின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சிவோன் மக்டோனா பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டேவிட் கமரூனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் வவுனியாப் பயணத்துக்கு எதிராகவும், காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கு நீதிகோரியும் அமைதியான முறையில் போராட்டம் நடத்திய ஜெனிற்றா கைதுசெய்யப்பட்டமை கண்டிக்கப்படவேண்டியது. ஆதலால் பிரிட்டன் இந்தக் கைதுக்கு தன் கண்டனத்தைப் பதிவுசெய்யவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-125)

## சீரான நேரசூசியின் கீழ் பேருந்துகளை இயக்குக

### கங்காதரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 12

பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, 750, 751, 752/1 சிற்றூர்தி வழித்தட சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளை, யாழ்ப்பாண மாவட்ட கூட்டிணைக்கபட்ட பேருந்துச் சங்க அலுவலகத்துக்கு வருகை தந்து சீரான நேரசூசியின் கீழ் சேவையில் ஈடுபடுமாறு குறித்த சங்கத்தின் தலைவர் கங்காதரன் தெரிவித்துள்ளார்.

இந்த வழித்தடச் சேவையில் ஈடுபடும் பேருந்துச் சாரதிகளிடையே அண்மைக்காலமாக பல்வேறுபட்ட முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பில் வினவியபோதே யாழ்ப்பாண மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட பேருந்துச் சங்கத்தின் தலைவர் கங்காதரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

750, 751, 752/1 சிற்றூர்தி வழித்தடப் பேருந்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களிடையே அண்மைக் காலமாக கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகளால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர். நேர நீடிப்பு, நேர அவகாசம், பயணிகள் கொள்ளளவு என்ற பல்வேறு விடயங்களை மையமாக வைத்து இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எனவே, சீரான போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு, யாழ்ப்பாண மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட பேருந்துச் சங்க அலுவலகத்துக்கு வருகைதந்து சீரான நேரசூசியின் கீழ் சேவையில் ஈடுபடுமாறு சம்பந்தப்பட்ட சாரதிகள் மற்றும் நடத்துநர்களைக் கோருகின்றேன் - என்றார். (ம-125)

### பொலிஸ்...

நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நான்கு சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-26)

### இணக்கப்பாடில்லை...

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபாரணம் ஆபிரகாம் சுமந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகிய மூவரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கட்சித்தலைவர் பதவிக்குப் போட்டியிடவுள்ள மூவரும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்து, புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்ய முடியுமா? என்பது தொடர்பில் நேற்றையதினம் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் மூவருக்கு இடையேயும் எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. இதனால், திட்டமிட்டபடி எதிர்வரும் 21ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தில் ஜனநாயக முறையிலான இரகசிய வாக்கெடுப்பு மூலம் தமிழரசுக் கட்சிக்கான தலைவர் தெரிவு இடம்பெறவுள்ளது. இதை தலைமைப் பதவிக்குப் போட்டி யிட்ட மூவரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 2024ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதியன்று திருகோணமலையில் இடம்பெறவுள்ளது. தலைவர் உட்படக் கட்சியின் புதிய நிர்வாகிகளைத் தேர்வு செய்வதற்காக கட்சியின் பொதுக் குழுவில், ஜனவரி 21ஆம் திகதி அந்தப் பதவிகளுக்கான தேர்தல் நடைபெறும். பொதுக்குழு உறுப்பினர்கள் வாக்களிப்பர். அதில் தெரிவுசெய்யப்படுபவர்கள் ஜனவரி 28ஆம் திகதி நடைபெறும் கட்சியின் 17ஆவது தேசிய மாநாட்டில் புதிய நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவுள்ளனர். (அ-ம-125-26-66)

### பிரிட்டன்...

தந்திர உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு பிரிட்டன் இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாள் பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்துக்கு அவர்கள் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியில் வருகை தந்தனர். வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களை வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்குச் சென்ற இளவரசி உள்ளிட்டவர்களை யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன், நூலகர் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள் வரவேற்றுக் கலந்துரையாடினர்.

தொடர்ந்து பளை, இந்திராபுரம் பகுதிக்கும் அவர்கள் சென்றனர். அங்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவிகளை அவர்கள் பார்வையிட்டனர். அத்துடன் 'ஹலோட்ரஸ்' கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்துக்குச் சென்று அந்த நிறுவனத்தின் செயற்றிட்டங்கள் குறித்தும் பார்வையிட்டனர். (அ-ம-20-26-66-9-125-113)

### பலஸ்தீனத்தை...

'ஒருநாடு' என்ற கொள்கையின் மூலம், இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. 'பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு நாடுகள்' என்ற கொள்கை மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 நாடுகளின் தூதுவர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

நிலையானதும் செயலூக்கமானதுமான பலஸ்தீன அரசாங்கத்தை நிறுவி, தஞ்சம் புகுந்திருப்பவர்களை நிரந்தரமாகக் குடியமர்த்த அவசியமான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். ஒரு நாட்டை நிறுவி, இரு நாடுகளின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கமுடியாது. ஹமாஸ் அமைப்பின் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் காஸா எல்லைகளின் மீதான தொடர்ச்சியாகத் தாக்குதலை நியாயப்படுத்தமுடியாது.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் கடல்வழிப் போக்குவரத்தில் இருக்கவேண்டிய சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே இலங்கை செங்கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இலங்கை ஆதரவு வழங்கி வருகின்றது - என்றார். (அ-ம-44-26)

### 1,000 ஏக்கரில்...

இதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

வடமாகாணத்தில் பிராந்திய முதலீட்டுச் சபையால் அடையாளப்படுத்தப்பட்டு முன்மொழியப்பட்ட அரச காணிகளிலேயே இந்த முதலீட்டு ஊக்குவிப்பு மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளாகத்தில் ஏற்றுமதியை மையப்படுத்திய முதலீட்டு மையமும், உப்பளம், யூரியா உற்பத்தி போன்ற இரசாயனம்சார் முதலீட்டு மையம் பரந்தனிலும், மாங்குளம் பகுதியில் விவசாயம், கால்நடை, மீன்வளத்தினை மையப்படுத்திய ஊக்குவிப்பு மையமும் அமைப்பதற்கே இவ்வாறு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் இரணவில என்ற பகுதியிலும் இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு மையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

### புலிகள்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், நாடாளுமன்றத்தில் நேற்று இவ்வாறு உரையாற்றியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுசென்ற ராஜபக்சக்கள் கடல் சுற்றுலா செல்கின்றனர். மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்சக்களைப் பாதுகாப்பதில் மட்டும்தான் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றுள்ளார். அடித்தட்டு மக்களின் முதுகெலும்பை முறிக்கும் வகையில் வரிகளை விதித்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

ஒற்றையாட்சிதான் இந்த நாட்டுக்கு சாபக்கேடு. எனவே, அதனை ஒழித்து தமிழ்த்தேச இறைமையை அங்கீகரிக்கக்கூடிய வகையில் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவாருங்கள்.

தமிழ், முஸ்லிம்மக்களின்குரல்வளையை நசுக்கும் வகையிலும், அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடும் விதத்திலுமே புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். அரசு அச்சட்டவரைவை மீளப்பெறவேண்டும். ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்பட்டதுபோல் புலிகள் மீதான தடையையும் நீக்கப்பட வேண்டும். புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இருந்து நீக்குங்கள்' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர். பொன் அருணாச்சலம் நூற்றாண்டு நினைவு தினம்



யாழ்ப்பாணம், ஜன.12

சேர்.பொன்.அருணாச்சலத்தின் நூற்றாண்டு நினைவுதின நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக அவரது சிலை அமைக்கப்பட்டிருக்கும் வளாகத்தில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

சேர்.பொன். அருணாச்சலத்தின் சிலைக்கு ஜனாதிபதி மலரஞ்சலி செலுத்தி நினைவுகூர்ந்தார்.

சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பயணத்தை ஆரம்பித்திருக்கும் தேசம் என்ற வகையில், அனைவரும் ஒன்றுபடுவதே சேர். பொன். அருணாச்சலத்துக்கு நாம் வழங்கும் உயரிய கௌரவமாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். நிகழ்வில் முன்னாள் அமைச்சர் டீ.எம். சுவாமிநாதன் மற்றும் பொன்னம்பலம் அருணாசலத்தின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-27)



வடமராட்சி உள்ளிட்ட யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குப் பரவல் அதிகரித்துவரும் நிலையில் டெங்குப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நெல்லியடி பொலிஸாரால் அண்மையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. வதிரியில் அமைந்துள்ள ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ம-100)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில்
பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன்
அமைந்துள்ள 4 1/2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.

077 077 4919


## மோசடியில் அகப்படாதீர்கள்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, டச்சுவீதி, GPS Lane அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குள்ளது என பத்திரிக்கைகளில் கடந்த சில நாட்களாக வந்த விளம்பரம் மோசடியாக செய்யப்பட்ட விளம்பரமாகும். குறித்த ஆதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மீளாய்வு/128/23 எனும் வழக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் காணி/1320/2024 எனும் வழக்கு நிலுவையில் உள்ளன. இக்காணியை விற்க முயல்வோருக்கு குறித்த காணியில் எவ்வித உரித்தும் இல்லை என்பதனை உரிமையாளர்கள் அறியத்தருகின்றனர்.

குறித்த மோசடி விற்பனையில் பங்குபற்றி காணி கொள்வனவு செய்வோருக்கெதிராகத் தலா 1 கோடி நட்டம் கோரி காணி உரிமையாளர்களால் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: 075 325 4124
074 136 4103

# பெருமளவு பணமோசடி

## இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 12

பெருமளவு பணம் கிடைத்துள்ளது என்றும், அந்தப் பணத்தை விடுவிக்க வேண்டுமாயின் ஒருதொகையை வைப்பிலிடுமாறும் கோரி இலட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 18 இலட்சம் ரூபா பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் சந்தேகநபரொருவர் முன்னரே கைது செய்யப்பட்ட நிலையில், மற்றொரு சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவ்விரு சந்தேகநபர்களும் உறவினர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-26)


## வேலை ஆட்கள் தேவை

கோவில் சிற்பவேலை
திறமையாகச் செய்யத் தெரிந்த
வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 076 6568 309



## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 02 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- பார்வையிடும்நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389,077 986 5457


## மரண அறிவித்தல்

பிறப்பு
17
03
1939



இறப்பு
09
01
2024

## முருகன் வீரசிங்கம்

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி மத்தி குமரநகரை வதிவிடமாகவும் கொண்ட முருகன் வீரசிங்கம் கடந்த (09.01.2024) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரன் யோகம் தம்பதியரின் மருமகனும், இன்பதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயஈஸ்வரி (வேவி), இராசாத்தி, சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, ராசா, மதுரா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மாணிக்கம், கணேசன், செல்வராசா, திருஞானசிவம், பூபாலசிங்கம், கிருபாமூர்த்தி, சூரியகுமார் மற்றும் மங்களேஸ்வரன், இன்பசோதி ஆகியோரின் மைத்துனரும், பிரியா, தனுஷன், தனுஷா, சானா, ஜசன், அஜய், அனோஜ், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் மாயாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி கிழக்கு, ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மத்தி,
குமரநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.